| 22 | T | I,II |
|---|---|---|

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரி பரீட்சை, 2020

நேரம் - 3 மணித்தியாலயம் ( மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்)

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத்தெரிவு செய்க.**

1) மெலிந்தப் பிறைக்கும் - **அப்பு** என்பதன் ஒத்த சொல்
   1. அம்பு 2. கண்ணீர் 3. வில் 4. துன்பம்
2) செயிருடன் வந்த சேயிழை – செயிர் என்பதன் பொருள்
   1. வயல் 2. உண்மை 3. நீதி 4. கோபம்
3) “எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்” **ஈதல்** என்பதன் எதிர்ப்பதம்
   1. வள்ளல் 2. வழங்கல் 3. கேட்டல் 4. இரத்தல்
4) “விதியை நோவர். தம் நண்பரைத்தூற்றுவர்…” என்பதில் **தூற்றுவர்** என்பதன் எதிர்ப்பதம்
   1. போற்றுவர் 2. இகழ்தல் 3. பேசுதல் 4. நிந்திப்பர்
5) புனிதனுக்கு – புனிதை என்பது போல தபுதாரனுக்கு
   1. தபுதாரி 2. விதவை 3. புனிதை 4. தபு
6) யானையின் மலம் இலத்தி என்பது போல ஒட்டகத்தின் மலம்
   1. எச்சம் 2. பிழுக்கை 3. விட்டை 4. இலத்தி
7) முத்துக்குவியல் என்பது போல பூதம்
   1. தொகுதி 2. கும்பல் 3. கணம் 4. திரள்
8) நாம்பன் - நாகு என்பது போல கடா
   1. மறி 2. பிடி 3. பிணா 4. நாகு
9) மண் + பாண்டம் என்பதை சேர்த்தெழுதினால்
   1. மட்பாண்டம் 2. மண்பாண்டம் 3. மற்பாண்டம் 4. மர்ப்பாண்டம்
10) கல் , வில் , ஒலி , படிமம் ஆகிய பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
   1. அகம் 2. சிறை 3. சிலை 4. நகை
11) பின்வருவனவற்றுள் பிரெஞ்சு மொழிச் சொல்
   1. கச்சேரி 2. துருப்பு 3. தோம்பு 4. கோப்பை
12) இன்று பலவகையான Touch Screen கைப்பேசிகள் பாவனைக்கு வந்துள்ளது. Touch Screen என்ற பதம் குறிக்கும் தமிழ்ச்சொல்
   1. தொடுகை 2. தொடுகண்ணாடி 3. தொடுதிரை 4. தொடுகைப்பேசி
13) பின்வரும் சொற்களில் வடக்குப் பிரதேச சொல்லாக அமைவது
   1. கெதியா 2. ஆணம் 3. முடக்கு 4. பசுந்து
14) உள்ளதை உயர்த்திக்கூறுவது
   1. உயர்வு நவிற்சியணி 3. தன்மை நவிற்சி அணி
   2. உருவக அணி 4. உவமை அணி
15) வேறு யாருடைய துணையுமின்றித் தானே தனித்து நின்று பகைவரை வெல்லுந்திறன் படைத்தோன்
   1. வீரன் 2. தீர்க்கதரிசி 3. அசகாயசூரன் 4. விகடகவி

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவ செய்க**

16) "வெட்டிப்பேச்சு" எனும் மரபுத்தொடர் தரும் பொருள்

1. பயனில் உரை 2. குதர்க்கவுரை 3. நகையுரை 4. விரிவுரை

17) எல்லோருக்கும் வசப்படுவான் எனும் பொருளைத் தரும் மரபத்தொடர்

1. எடுத்தெறிதல் 2. எடுப்பார் கைப்பிள்ளை 3. ஈடேறுதல் 4. ஓத்துப்பாடுதல்

18) கடிமனை என்பது

1. இடைச்சொற்றொடர் 2. உரிச்சொற்றொடர்

3. அடுக்குத்தொடர் 4. வினை முற்றுத்தொடர்

19) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்ற அருஞ்சொற்றொடர் குறிப்பது

1. தேய்வு 2. மறைவு 3. தளர்ச்சி 4. வளர்ச்சி

20) துன்பம் செய்கின்றவர்கள் நம்பி காரியத்தில் ஈடுபடுதல் என்பதைக்குறிக்கும் உவமைத்தொடர்

1. மீகாமன் இல்லாத மரக்கலம் போல
2. ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியது போல
3. இளவு காத்த கிளி போல
4. அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல

21) சொப்பணம் கண்ட அரிசி சோற்றுக்குதவாது என்ற பழமொழிக்குப் பொருத்தமான மற்றொரு பழமொழி

1. நாய் விற்ற காசு குரைக்குமா? 2. கனவிற் கண்டவர் பணம் செலவிற்குதவுமா?

3. வெறுங்கை முழம் போடுமா? 4. ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது.

22) உள்ளதை உள்ளபடி செய்தால் பலரைப் பகைத்துக்கொள்ள வேண்டி வரும் என்னும் கருத்துள்ள பழமொழி

1. கெடுவான்கேடு நினைப்பான் 2. ஏழைப்பேச்சு அம்பலம் ஏறுமா?

3. யதார்த்தவாதி வெகுசன விரோதி 4. கெடு குடி சொல் கேளாது

23) "திருவள்ளுவரால் திருக்குறள் எழுதப்பட்டது" என ஆசிரியர் கூறினார். இது

1. கலப்பு வாக்கியம் 2. தனி வாக்கியம்

3. கூட்டு வாக்கியம் 4. தொடர் வாக்கியம்

24) இரு பொருள் அமையத்தொடுப்பது

1. அந்தாதி 2. ஏதகை 3. மோனை 4. சிலேடை

25) கைமாத்து என்பதன் திருத்தமான வடிவம்

1. கைமாறு 2. கைம்மாற்று 3. கைமாற்று 4. கய்மாற்று

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

26) பின்வருவனவற்றுள் காரணப்பெயராக வருவது

1. மண்வெட்டி 2. நிலம் 3. வயல் 4. வானம்

27) பட்டம் என்ற சொல்லின் மாத்திரை அளவு

1. நான்கு 2. மூன்று 3. இரண்டு 4. ஐந்து

28) கீர்த்தி என்ற பொருளைத்தரும் இணைமொழி

1. ஏற்ற இறக்கம் 2. பேரும் புகழும் 3. ஒப்பும் உயர்வும் 4. சுகதுக்கம்

29) அயன் , அரன் , அரி என்பது

1. முக்கண் 2. மும்மூர்த்தி 3. முக்குணம் 4. மூன்று கடவுள்

30) பின்வரும் சொற்களில் ''க'' கரம் மாறுபட்டு ஒலிக்கும் சொல்

1. கப்பல் 2. பாக்கு 3. தங்கம் 4. நாட்காட்டி

31) தமிழ் மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள்

1. மௌ , வௌ 2. ஒ , ஔ 3. வு , யொ 4. நு , நொ

32) பெயராகவும் வினையாகவும் வரும் சொல்

1. உண் 2. கல் 3. அழகு 4. நட

33) உம்மைத் தொகையாக வந்துள்ள தொடர்

1. விடு கணை 2. வரவு செலவு 3. மலைக்கோயில் 4. முக்குணம்

34) ''வானக்கடலில் வெள்ளியோடம் ஒன்று கண்டேன்'' இங்கு வானக்கடல் என்பதில் இடம்பெற்றுள்ள அணி

1. உவமை 2. உருவகம் 3. தன்மை நவிற்சி 4. உயர்வு நவிற்சி

35) ''காதோடு தான் நான் பேசுவேன் மனதோடு தான் நான் பாடுவேன்'' இங்கு இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு

1. தான் 2. பேசு 3. ஓடு 4. நான்

**பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு பொருத்தமான சொல்லைத்தெரிவு செய்க**

36) ஊழல்களை இல்லாதொழிப்பதாக ஜனாதிபதி ...........................

1. சூளுரைத்தார் 2. பறை சாற்றினார்
3. பிரகடனப்படுத்தினார் 4. பகிரங்கப்படுத்தினார்

37) இடர்கால ..................... தொகை வழங்குவதை அரசாங்கம் நிறுத்திவிட்டது.

1. பணம் 2. கடன் 3. நிவாரணம் 4. மானியம்

38) கயல்விழன் வெளிநாடு செல்வதற்காக .................................. பெற சென்றிருந்தான்.

1. நுழைவுச்சீட்டு 2. அனுமதிச்சீட்டு
3. அடையாளச்சீட்டு 4. கடவுச்சீட்டு

39) பவள விழா மிகவும் ................................ நடைபெற்றது.

1. கோலாகலமாக 2. அழகாக 3. மெதுவாக 4. சிறப்பாக

40) பின்வரும் வாக்கியங்களை பந்தியாக்குவதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

(அ) சினிமா பழங்கால இலக்கியங்களை ஞாபகப்படுத்தும் வகையில் தொழிற்பட்டது.
(ஆ) அதைத்தொடர்ந்து உரை நடை இலக்கியம் வளர்ச்சி அடைந்து வந்தது.
(இ) செய்யுள்களின் மூலமே தமிழ் வளர ஆரம்பித்தது எனலாம்.
(ஈ) இலக்கியங்களின் வளர்ச்சியுடன் மத்தியில் சினிமாவும் தோற்றம் பெற்றது.
(உ) இன்று சினிமா இலக்கியங்களை புதுமைப்படுத்தி வெளியிடுகின்றது.

1. ஈ , அ , இ , ஆ , உ 2. இ , ஆ , உ , ஈ , அ
3. இ , ஆ , ஈ , அ , உ 4. உ , அ , ஈ , ஆ , இ

| 22 | T | I,II |
|---|---|---|

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரி பரீட்சை, 2020

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

கவனிக்க :

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1. சுருக்கமான விடை எழுதுக.
   1) பின்வரும் தொடரை சந்திப்பிரித்து எழுதுக.
      மூன்றுலகு மீன்றானை முன்னீன்றானைப்
   2) பேதை பெருஞ் செல்வம் உற்றக் கடை
      ஏதிலார் ஆற தமர் பசிப்பர்
      இதன் எழுவாய் , பயனிலையினை எடுத்துக்காட்டுக.
   3) 'காலப் புனல் கனக்கும்' - இதில் பயின்றுள்ள அணி யாது?
   4) "மழ, வெய்யில்ல நனயாம அவவ கொண்டு போகனும்" – என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்குக்கு மாற்றி எழுதுக.
   5) பின்வரும் வாக்கியத்திற்கு மிகப் பொருத்தமான நிறுத்தக் குறியினையிட்டு மீண்டும் எழுதுக.
      ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம் என்றார்
   6) பேராசிரியர் சேதுப்பிள்ளை தேம்பாவணி பற்றிய கருத்துக்களைத் தந்துள்ளார். என்ற செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
   7) மலை முகட்டில் கண் வளர்த்தோம் - 'கண் வளர்த்தல்' எனும் மரபுத் தொடர் தரும் பொருள் யாது?
   8) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை நீக்கி மீண்டும் எழுதுக.
      சீரற்ற அதிகாரிகள் நிலவும் காலநிலை குறித்து அவதானத்தைச் செலுத்துகின்றனர்.
   9) செவ்வி காண்போருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் இரண்டு தருக.
   10) 'நெய்' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

**(20 புள்ளிகள்)**

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிய செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பிடுக.

   (1) இன்று பெரிய நகரம் முதல் சின்னச்சின்ன நகரங்கள் வரை துரித உணவுக் கலாசாரம் (பாஸ்ட்புட்) விரிவடைந்துக்கொண்டு வருகின்றது. இன்றைய இளம் தலைமுறையினர் இவ்வாறான உணவுகளை சாப்பிடுவதால் பல்வேறு நோய்களுக்கு உள்ளாகின்றனர். இதனால் எதிர்காலத்தில் உடல் உள ஆரோக்கியம் குன்றியவர்களாகவும் மாறிய மாணவர் பரம்பரையாக உருவாகவும் வாய்ப்புண்டு. எனவே ஆரோக்கியமான உணவின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு **விளக்கக் கட்டுரை.**

   (2) உலகம் இன்று இயற்கையாலும் இயற்கைக்கு முரணாகவும் பல்வேறு பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றது. மனிதர்களாகிய நாம் நமக்கு எதிரான அச்சுறுத்தல் இயற்கையிலிருந்து ஏற்படும் போது , தனி மனித மற்றும் சமூக ஒற்றுமையை கடைப்பிடிப்பது மிகவும் அவசியமாகிறது. ஒற்றுமையே நமக்கு எதிரான சக்திகளை வெற்றிக்கொள்வதற்கான மிகப்பெரிய ஆயுதம் எனலாம். எனவே தனி

kalvi.lk

‘மனிதர்க்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் ஒற்றுமையை வளர்க்க வேண்டும்’ எனும் பொருளில் ஒரு **மேடைப்பேச்சு**

(3) வளர்ந்துவரும் அறிவியல் முன்னேற்றத்தில் கணினிப்பயன்பாடுகள் மிக இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது. கணினிப்பயன்பாடுகள் இல்லாத துறைகளே இல்லை எனலாம். இன்று கிராமங்களில் கூட இணையப்பயன்பாடு என்பது மிக சாதாரணமாக உள்ளது. அந்தவகையில் இணைய கலாசாரம் மிகத் தீவிரமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இன்று இணையம் ஒரு ரூபாய் நாணயத்தைப் போல் நன்மைகள், தீமைகள் என இரண்டுபக்கங்களையும் கொண்டுள்ளது. எனவே இணையமானது நன்மைகளுக்கே என வாதிடும் ஒருவருக்கும், இணையம் தீமைகளுக்கே என்று வாதிடும் இன்னொருவருக்கும் இடையிலான **உரையாடல்**

(4) தரம் பதினொன்றில் கல்விபயிலும் குமரனை , சகல பாடங்களிலும் இவன் சித்தியடைய மாட்டான், இவனால் இந்த பாடசாலைக்கு அவமானம் என்று ஆசிரியர்கள் பலரும் கூறி அவனை ஒன்றும் முடியாதவனாக ஓரங்கட்டிவிட்டனர். புதிதாக வந்த சித்திரப் பாட ஆசிரியர் அவனை அடைந்து அவனுள்ளே இருந்த ஆற்றலை அறிந்து வழிகாட்டினார். சாதாரண தரப் பரீட்சையில் சித்திரபாடத்தில் சிறப்புச் சித்திபெற்று இன்று மிகச்சிறந்த ஓவியனாகவும் மிளிர்கின்றான். என்ற கருப்பொருளிலமைந்த ஒரு சிறுகதை.

**(25 புள்ளிகள்)**

3. **பின்வரும் உரைப்பகுதியை சாராம்சத்தை 40 - 45 சொற்களில் சுருக்கி எழுதுக.**

மக்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்பட ஆவன செய்வது ஊடகவியலாளர்கள் பொறுப்பு. அதே நேரம் அந்த அறிவை ஜனநாயக அடிப்படையில் மக்களுக்கு வழங்குவது பற்றியும் அவர்கள் கரிசனையாக இருக்க வேண்டும். அறிவு வளர்ச்சியானது சுதந்திர அடிப்படையிலும் தேர்வு வளர வேண்டும். அதாவது அரசாங்கமோ அரச அதிகாரங்களோ இதுதான் உண்மை என்று கூறும் போது ஆராயாமல் அதனை மக்களிடம் கொண்டு சேர்ப்பது எமது கையாலாகாத தனத்தையே பிரதிபலிக்கும். அங்கு எங்கள் ஆராயும் சுதந்திரம் பறிபோகின்றது. உதாரணத்திற்கு ஒரு நாடு எங்களுக்கு மிகச்சிறந்த அடிப்படையில் குறைந்த வட்டியில் கடன் தருகின்றது என்று அரசாங்கம் அறிவித்து அந்த நாட்டை வானளாவப் புகழ்கின்றது என்று வைத்துக்கொள்வோம். ஆனால் பெரிய பெரிய உள்நாட்டு ஒப்பந்தத்தேர்வுகளில் மற்றைய நாடுகளை விண்ணப்பம் செய்ய இடமளிக்காமல் மேலே குறிப்பிட்ட குறைந்த வட்டி தரும் நாட்டுக்கு மட்டும் சிறப்பிடம் இளிக்கப்படுகின்றது. என்றும் வைத்துக்கொள்வோம். அதன் தாற்பரியம் என்ன? ஆயிரம் இலட்சத்துக்கு மற்றைய நாடுகளால் செய்து முடிக்கக்கூடிய ஒரு செயற்பாட்டை அந்த நாடு இரண்டாயிரம் இலட்சத்திற்கு செய்யப்போவதாக அறிவிக்கின்றது. எங்கள் நாடு வேறு வழியின்றி முன்னர் குறைந்த வட்டிக்குப் பணம் தந்ததால் அதற்கு ஒத்துக்கொள்கின்றது. அங்கு குறைந்த வட்டி என்று புகழப்பட்ட நாடு இங்கு கொள்ளை இலாபத்திற்கு ஒப்பந்தத்தை ஏற்று நடைமுறைப்படுத்தகின்றது.

எமது நாட்டுக்கு ஏற்படும் பயன் , பாதிப்பு இவற்றை அலசி ஆராயாமல் அரசாங்கம் தரும் முதற் செய்தியை மட்டும் அரசாங்கம் எதிர்பார்ப்பது பால் அதற்கு அடிபணிந்து வெளியிட்டால் நாட்டுக்கு வேறு விதத்தில் ஏற்படப் போகும் பாதிப்புப்பற்றி மக்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போய்விடுகின்றது. சமாந்தரமாக நடந்துக்கொண்டிருக்கும் நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து ஒன்றுக்கொன்று எந்தவிதத்தில் அவை தொடர்புடையவை அவை மக்களையும் நாட்டையும் எந்தளவுக்குப் பாதிக்கின்றன. பயன் தருகின்றன என்பதை எல்லாம் ஆராய்ந்து மக்களுக்கு அறிவூட்டுவது ஊடகவியலாளர் கடமை. அது மட்டுமல்ல நடைபெறப்போகும் ஏதாவது செயற்பாடுகளால் நாட்டு மக்களுக்கு வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் பாதிப்புகள் பற்றி ஆராய்ந்து அவற்றை முன்கூட்டியே அறிவிப்பதும் ஊடகவியலாளர் பொறுப்பாகும்.

**(10 புள்ளிகள்)**

4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி முதலாளித்துவத்தை வலிமையான கோட்பாடாக ஆக்கியுள்ளது. முன்னெப்போதும் இல்லாத அளவில் தன்னுடைய பண்பாட்டு தத்துவார்த்த தாக்குதல்களை முதலாளித்துவம் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் முதலாளித்துவத்தின் "பண்பாட்டுத் தேவைகள்" தொடர்பாகவும் கவனம் செலுத்துவது அவசியமானதாகும். முதலாளித்துவம் தன் தோற்றத்தின் போது, பழைய சமுதாய அமைப்பாகிய 'நிலமானிய சமுதாய அமைப்பு' முறையை இல்லாது ஒழிக்கும் கட்டாயத்திற்கு உள்ளாகியது. நிலபிரபுக்களின் பிடியிலிருந்த பண்ணை அடிமைகளை விடுவிக்கும் தேவை முதலாளித்துவத்துக்கு இருந்தது. நிலமானிய அமைப்பை பேணி பாதகாத்து வந்த , மத அதிகார பீடங்களையும் நிலமானிய அமைப்பின் ஊன்று கோலாக நின்ற உழுத்துப்போன சிந்தனைகளையும் சமுதாய மரபுகளையும் எதிர்க்கும் தேவை முதலாளித்துவத்திற்கு இருந்தது. எனவே, ஒரு வகையில் நிலமானிய அமைப்புக்கு எதிரான விடுதலை சக்தியாக வரலாற்றில் முற்போக்கான பாத்திரத்தை வகித்தமை கவனத்திற்குரியது.

1. கைத்தொழில் புரட்சி எப்போது ஏற்பட்டது?
2. முதலாளித்துவத்தில் எது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது?
3. பழைய சமுதாய அமைப்பாக இங்கு குறிப்பிடப்படுவது யாது?
4. முதலாளித்துவத்தின் தேவைகள் இரண்டைக் குறிப்பிடுக.
5. உழுத்துப்போன சிந்தனை என்பதனால் கருதப்படுவது யாது?

**(10 புள்ளிகள்)**

5. மலையூர் பிரதேசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலையானது நீண்டகாலமாகப் வைத்திய சேவையின்றி காணப்பட்டுவருகின்றது. இதனால் அந்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் தமக்கு ஏற்படுகின்ற நோய்க்கான சிகிச்சையை பெறுவதற்காக சுமார் 15 கிலோமீற்றர் அளவில் செல்ல வேண்டியுள்ளது. அந்த கிராமத்தின் இளைஞர் மன்றத்தின் செயலாளர் கு. தமிழன்பன் என உங்களைக் கருதிக்கொண்டு , வைத்தியசாலையில் மீண்டும் வைத்திய சேவையை பெற்றுத்தருமாறு கோரி , பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கு 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

- வைத்தியசாலையின் தற்போதைய நிலை
- அதனால் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்
- வைத்தியசேவை கிடைப்பதால் பெறக்கூடிய நன்மைகள்

உலகம் முழுதும் 'கொரோனா தொற்று நோய்' மிக வேகமாக பரவுவதோடு மக்களின் அன்றாட வாழ்க்கையையும் சீர்குலைத்து விடுகின்றது. இந்நோயின் பாதிப்புகளையும் அதிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகளையும் உள்ளடக்கியதாக **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

**(15 புள்ளிகள்)**

kalvi.lk

| 22 | T | III |
|---|---|---|

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரி பரீட்சை, 2020

தமிழ் மொழியும் இலக்கியமும் III

கவனிக்க :

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4, ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**சுருக்கமான விடை தருக.**

(1) அன்னப்பேடை சிறை இலது ஆய்க்கரை துன்னிற்று
(அ) அன்னப்பேடை என்பது யாது?
(ஆ) துன்னிற்று என்பதன் பொருள் யாது?

(2) ‘பனிக்கூட்டம் விரட்டிவரும் பகலவனின் வீரம்’
(அ) இங்கு பயின்றுள்ள அணி யாது?
(ஆ) பகலவன் என்பது யாது?

(3) கைராசிக்காரி நீங்கள்தான் மாமி, என்ர தலப் புள்ளய ஏந்தணும்’’ நேற்றும் அவ்வா ராத்தா வீங்கிய வயிற்றுடன் வந்து மூத்தம்மாவிடம் சொல்லி விட்டுப் போனா.
(அ) தலப்புள்ள என்பது  யாது?
(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள இஸ்லாமிய உறவு முறைச் சொல் யாது?

(4) ‘இனி நமக் குளதென நினைக்குங் கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலோ மென்றான் ’
(அ) இப்பகுதி இடம்பெற்றுள்ள இலக்கியம் யாது?
(ஆ) இப்பகுதியில் குறிப்பிடப்படும் இலட்சியம் எது?

(5) ‘நாடகமேடை மாதிரியே செட் போடப்பட்டு காமிராவை முன்னால் வைத்து நாடகம் நடிக்கப்பட்டு நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்து அது படமாக்கப்பட்டது’
(அ) இவ்வுரைப்பகுதி இடம்பெறும் கட்டுரையை எழுதியவர் யார்?
(ஆ) காமிரா என்பதன் தமிழ் வடிவம் யாது?

(6) போத மூன்று நலஞ்செயு நாடு , புவன மூன்று வலஞ் செயு நாடு
(அ) போதம் மூன்றும் எவை?
(ஆ) புவனம் மூன்றும் எவை?

(7) ‘ஆழப்புதைந்த தேயிலைச் செடியின் அடியிற் புதைந்த அப்பனின் சிதை மேல்’
(அ) இக்கவிதை தமிழில் தந்தவர் யார்?
(ஆ) அப்பனின் சிதை என்பதன் கருத்து யாது?

(8) கோது இலான் இந்த மொழி கூறுதலும் , மாமாயன் கூறல் உற்றான்.
(அ) கோது இலான் என்று குறிப்பிடப்படுபவன் யார்?
(ஆ) மாமாயன் என்று குறிப்பிடப்படுபவன் யார்?

(9) ‘வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே’
(அ) விழிவேல் என்பதில் வந்துள்ள அணி யாது?
(ஆ) இப்பாடலைப்பாடியவர் யார்?

(10) ‘பழக ஒரு மரப்பாச்சி பாவையரே யார் பறிச்சா?’
(அ) மரப்பாச்சி என்றால் என்ன?
(ஆ) பாவையர் என்று குறிப்பிடப்படுவோர் யாவர்?

2. **பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(1) நைவீர லீர்மைந்தீ ரினித் துயரா
னாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்
றாமன்றே விலங்கற் றிண் டோட்
கைவீரக் களிறனைய காளையிவன்
றன்னோடு கலந்து நீங்க
ளைவீரு மொருவீரா யகலிடத்தை
நெடுங்கால மளித்தீ ரென்றாள்

(அ) மெய்வீரர்கள் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?
(ஆ) குகனின் சிறப்புக்களைத் தருக.

(2) காத்தி ருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார் ந்து களித்திட
யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தனையோ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பலகழித்திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்

(அ) மேழை என்பதன் பொருள் யாது?
(ஆ) பாரதியார் எவ்வாறு நாட்களை கழித்ததாகக் கூறுகின்றார்

(3) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

(அ) கொக்கிடம் காணப்படும் இயல்பு யாது?
(ஆ) இப்பாடல் கூறும் நீதிக்கருத்தைத் தருக.

(4) அருணந்தி சிவாச்சாரியார் ஒரு பெரிய மகான். அவருக்கு ஒருவகை வயிற்றுவலி இருந்தது. அவர் அந்த வலியை மாற்றாமல் தமது பிரார்த்தம் என்று கருதி அதை அநுபவித்துக்கொண்டு வந்தார். மாணவர்களுக்குப் பாடஞ்சொல்கிற போது மாத்திரம், அவர் தமது வலியை அங்கவஸ்திரத்தில், ஆவாகனம் பண்ணிப் பக்கத்தில் வைத்து விட்டு பாடஞ் சொல்வது வழக்கம். அந்த வஸ்திரமும் அதுவரை துடிதுடித்துக் கொண்டிருக்கும். பாடஞ் சொன்ன பிறகு பழையபடி அந்த வலியை எடுத்து வயிற்றில் விட்டுவிடுவார் என்று ஒரு கதை.

(அ) அங்கவஸ்திரம் , பிரார்த்தம் ஆகிய சொற்களின் பொருளைத் தருக.
(ஆ) ஆவாகனம் பண்ணி வைத்தல் என்றால் என்ன?

(5) ஐயாயிரம் ஆண்டுகளின் முன்பே கடைப்பிடித்து அனுபவித்த இலட்சிய சமநோக்கினை நாம் மீண்டும் பெற வேண்டும். இலக்கியங்களிலே பரந்துபட்டுக் கிடக்கின்ற இலட்சியங்களின் இயல்பினை நாம் கண்டறிதல் வேண்டும். இலட்சிய புருடர்களின் சம நோக்கினையும் , சகிப்புத்தன்மையினையும் நாம் இலக்கியங்களாலே கற்றுக்கொள்ள வேண்டும். இலட்சிய சமநோக்குடன் நமது சமூகத்திலுள்ள உயர்வு தாழ்வுகளைச் சமன்செய்து சீர்ப்படுத்த வேண்டும். நமது இலக்கிய பூங்காவின் நறுமணம் நமக்குப் புத்துயிரளிப்பதாக.

(அ) நாம் இலக்கியங்கள் வாயிலாக எவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும்?
(ஆ) இலக்கியப் பூங்கா என்பது எவ்வகை அணி?

3. 'நாவலர் எழுந்தார்' என்ற கட்டுரையில்

(அ) வாதமகா சபையின் உச்சம்
(ஆ) நாவலர் எழுந்து நடந்த விதம்

அல்லது

பேதைமையில்

(அ) பேதைமை உடையோரின் செயல்கள்
(ஆ) பேதைமை உடையோர் அடையும் துன்பம்
விபரிக்கப்படுமாற்றை ஆராய்க

4. கம்பியூட்டர் சிறுகதையில்
(அ) கம்பியூட்டர் வருகையால் குடும்பத்தில் ஏற்பட்ட மாற்றம்
(ஆ) கையாளப்பட்டுள்ள மொழி நடை
என்பன வெளிப்படுமாற்றை எடுத்தியம்புக.

அல்லது

குற்றாலக் குறவஞ்சியில்
(அ) நாட்டுவளம்
(ஆ) அணிச்சிறப்பு
என்பவற்றை விளக்குக.

**5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

5. தனிப்பாடல் பகுதியில்
(அ) காளமேகப் புலவரின் சிறப்பு
(ஆ) எள்ளும் பாம்பும் ஒப்பிடப்பட்டுள்ள விதம்

6. நாட்டார் பாடல் , அரிவி வெட்டும் பாடலில்
(அ) உழவர்கள் ஐயனாரிடம் வேண்டி நிற்பவை
(ஆ) அரிவி வெட்டும் இளைஞர்களின் சிறப்பும் அரிவாளின் சிறப்பும்

7. 'எது நல்ல சினிமா?' என்ற கட்டுரையில்
(அ) நல்ல சினிமாவின் இயல்புகள்
(ஆ) படத்தொகுப்பு
பற்றி கூறப்படுமாற்றை முன்வைக்குக.

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page